1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:— இரண்டு படுக்கைகள் கொண்ட ஏ-பிரிவு, 2 படுக்கைகள் கொண்ட பீ-பிரிவு, 16 படுக்கைகள் கொண்ட சி-பிரிவு, 5 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு முதலியவை திறப்பதுபற்றி ஆய்வு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. க. மீனுட்சிசுந்தரம்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச மருத்துவச் சலுகை இருப்பதாக நான் அறிகிறேன். தற்போதைய வினுவிற்கு இப்போது நான் கேட்கவிருக்கும் வினு தொடர்புடையது அல்ல என்ருலும், மாண்புமிகு மக்கள் நலத் துறை அமைச்சர் அவர்கள்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்பதால், தயவு செய்து இதற்கு விடையளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் போன்று ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்களின் ஆசிரியக் குடும்பங்களுக்கெல்லாம் இலவச மருத்துவச் சலுகைகள் உண்டு. ஆனுல் நான் சட்டமன்ற மேலவை உறுப்பினுக ஆகிவிட்டதையடுத்து எனக்கு மட்டும்தான் அந்தச் சலுகை உண்டு என்றும் எனது குடும்பத்தினருக்கு அந்தச் சலுகை இல்லை என்றும் சொல்லப்படுகிறது. எனவே உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவச் சலுகை அளிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

Examination held in Tirunelveli Medical College.

* 79 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. Sankaralingam): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that 71 Medical College students were affected due to the wrong distribution of question papers in the examination held at Tirunelveli Medical College during April, 1978 ; and

(*b*) if so, the alternative arrangements made to rectify the same?

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நடந்த தேர்வு.

திரு. வே. தங்கப்பாண்டியன்: (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்) மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நடந்த தேர்வில் வினுத்தாள்களை

மாற்றிக் கொடுத்ததால் 71 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன்: (அ) மாணவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

(இ) ஏப்ரல் 24-ம் தேதி நடக்கவிருந்த தேர்வை நடத்தாமல் ஒத்திவைத்து, அந்த ஆண்டு ஆங்கிலப் பாடத்தில் வினாக்கள் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்று 28-4-78-அன்று தேர்வு நடத்தி வைக்கப் பெற்றுள்ளது.

Export of Handloom Cloth.

* 80 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Handlooms be pleased to state—

(*a*) whether the Government have any proposal to establish an Agency which would help the export of handloom cloth; and

(*b*) if so, when this will be established?

கைத்தறித் துணி ஏற்றுமதி.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு உதவுகின்ற அமைப்பு ஒன்றினை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: (அ) வினாவில் குறிப்பிட்டுள்ள அமைப்பு நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி: கைத்தறித் துணி ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், பெருமளவுக்குத் தமிழகம்தான் முன்னணியில் நிற்கிறது. என்றாலும்கூட இந்த ஏற்றுமதி குறித்த முழு அதிகாரம், முழுப் பயன் ஆகியவைகளை மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அகில இந்திய அடிப்படையில் செல்வாக்கைப் பெற்று, முன்னணியில் அனுபவித்து வருகிறார்கள். அதன் விளைவாக மில்களில் தயாரிக்கப்படும் துணிகள் எல்லாம் கைத்தறித் துணிகள்